அம்பத்தூர் மக்களுக்கு ஒரு சிறப்பான விளையாட்டு மைதானம் அமைத்துத் தாரீர்!

திருமங்கலம் - அம்பத்தூர் ஓ.டி; மெட்ரோ ரயில் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவீர்!

சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் அம்பத்தூர் ஜோசப் சாமுவேல் கோரிக்கை!

சென்னை, ஜூலை 1- சட்டப்பேரவையில், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அம்பத்தூர் தொகுதி கழக உறுப்பினர் ஜோசப் சாமுவேல், "அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள டன்லப் தொழிற்சாலைக்கு அரசினால் வழங்கப்பட்ட 6 ஏக்கர் நிலம் கொண்ட மைதானத்தை திரும்ப பெற்றுக் கொண்டு அம்பத்தூர் மக்களுக்கு ஒரு சிறப்பான விளையாட்டு மைதானம் அமைத்து தர வேண்டும்" - "திருமங்கலம் முதல் அம்பத்தூர் ஓ.டி வரை மெட்ரோ இரயில் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும்" என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினார்.

ஜோசப் சாமுவேல்: மனிதன் மனிதனாகத்தான் வாழ வேண்டும்; அவர் யாருக்கும் அடிமை இல்லை என்று தன் வாழ்நாள் முழுவதும் அரும்பாடுபட்ட அற்புதத் தலைவர் ஈரோட்டு பூகம்பம் வெண்தாடி வேந்தர் ஐயா தந்தை பெரியார், அடுக்குமொழியில் பேசி நாட்டு மக்களின் மனதில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருந்த அறிவுக்களஞ்சியம் காஞ்சித் தலைவர் பேரறிஞர் அண்ணா, தெற்கில் குடியிருந்த இந்தியாவின் திசைகாட்டி, திராவிட சூரியன், நின்ற தேர்தலில் எல்லாம் வென்று காட்டி, இருந்த சபையில் முழு ஆளுமையுடன் இருந்த அற்புதத் தலைவர், முத்தமிழறிஞர், மூதறிஞர், ஒடுக்கப்பட்ட மக்களின் பாதுகாப்பு கவசம், நம் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் உள்ளிட்டோருள்ள திசை நோக்கி வணங்குகிறேன்.

நாடாளுமன்றத் தேர்தலில் 40/40 என்று வென்று காட்டி, இந்தியாவிலேயே 100/100 மார்க் வாங்கிய நமது தலைவர் முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர், கருவிலிருந்து கல்லறை வரை மனித வாழ்விற்கு பல்வேறு அற்புதத் திட்டங்களைத் தீட்டி வரும் திராவிட மாடல் முதல்வர், பெரியாராய், அண்ணாவாய், கலைஞராய், இனமான பேராசிரியராய் நாங்கள் பார்க்கும் ஒரே தலைவர் தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். இளைஞர்களின் முதல்வர், பகுத்தறிவு சுடரொளி தலைவர் கலைஞரின் மறுபதிப்பு, இந்தியாவே உற்றுநோக்கிய சனாதன எதிர்ப்பு, எதற்கும் பின்வாங்காத போர்க்குணம், புன்னகையில் எதிரிகளின் மனதையும் கொள்ளை கொள்ளும் சிறப்பு என எல்லாம் உடைய எங்களின் இளந்தலைவர், சின்னவர் என்று பாசமாய் சொன்னாலும் அறிவில், ஆற்றலில், துணிவில், தூய்மையில், பணிவில், பாசத்தில், நட்பில் பெரியவர் எங்கள் இரக்கமுள்ள இளந்தலைவர் அவர்களை வணங்குகின்றேன்.

பேரவைத் தலைவர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் உள்ளிட்ட சம சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருபெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் டி.ஆர். பாலு அவர்களை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்த அம்பத்தூர் தொகுதி மக்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இந்த நேரத்தில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புகழ்பெற்ற துறையான விளையாட்டுத் துறை, தமிழ்நாட்டினரிடையே விளையாட்டுத் திறனை வளர்க்கவும், தமிழ்நாட்டு விளையாட்டு மைதானங்களை சர்வதேச தரத்திற்கு வலிமைப்படுத்தவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1999 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட துறை இந்த விளையாட்டுத் துறை. இந்த விளையாட்டுத் துறையின் பிதாமகன், நூற்றாண்டு நாயகர் கலைஞர். கலைஞருடைய நூற்றாண்டு நிறைவு ஆண்டில் இத்துறையின் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த துறையின் அமைச்சர், இளைஞர்களின் பாதுகாவலர், நாளைய தமிழகம், அண்ணன் உதயநிதி அவர்களுக்கு மீண்டும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஈன்று புறந்தருதல், என் தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே;
ஒளிறு வாள் அருஞ் சமம் முருக்கி,
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே;

மகனைப் பெற்று பேணிக் காப்பது தந்தையின் கடமை; அவரை சான்றோர் ஆக்குவது தந்தைக்குக் கடமை; வேல் வடித்து பயிற்சி கற்றல் தலைவன் கடமை; தன் நாட்டை நன்னடத்தையுடைய மக்களாக்குவது மன்னருக்கு கடமை; ஒளிர்கின்ற வாளால் பகை எனதும் யானை வெட்டி வீழ்த்துவது படை வீரராக இளைஞரின் கடமை என்ற சங்கப் பாடலுக்கு உயிர் ஊட்டிய நம் தேசத்தை மதச்சார்பற்ற நாடாக மாற்றி, தம் தளபதிகளுக்கு வேல் வடித்து, பகை வெல்லும் பயிற்சி தந்து, 40க்கு 40 வென்ற தலைவர் அவர்களையும், அதேபோல், களிறு போன்ற ஆதிக்க பகையை கூர்வாள் போன்ற திராவிட கொள்கையைக் கொண்டு வீழ்த்தி வெற்றி கண்ட சின்னவரையும் வணங்குகின்றேன்.

விளையாட்டின் தலைநகரமாக தமிழ்நாட்டை மாற்றிய சின்னவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தை விளையாட்டுத் துறையில் முதன்மையான மாநிலமாக மேம்படுத்தும் வகையில், பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மிகக் குறுகிய காலத்தில், திட்டமிட்டு சர்வதேச நாடுகள் பாராட்டும் வகையில் தமிழகத்தில் 44வது சர்வதேச Chess Olympiad போட்டிகள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டன. இது, தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்கள் மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோரின் நிர்வாகத் திறனை காட்டுகிறது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு, சர்வதேச அளவிலும், தேசிய

அளவிலும், நம்முடைய மாநில இளைஞர்கள் பல்வேறு விளையாட்டுத் துறைகளில் பங்கேற்று பதக்கங்களை வென்று, தமிழகத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் திட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. உலக Squash போட்டி போன்ற சர்வதேச போட்டிகள் சென்னையில் நடத்தப்படுகின்றன. நலிந்த விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வூதியம் ரூபாய் 3 ஆயிரம் வழங்கப்பட்டு வந்தது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றவுடன், அந்த ஓய்வூதியத்தை 6,000 ரூபாயாக உயர்த்தி வழங்கினார். சின்னவர் அவர்களின் கடும் உழைப்பால், அண்மையில் Khelo India, 2023 விளையாட்டுப் போட்டியில், தமிழ்நாடு 38 பதக்கங்களை பெற்று இரண்டாம் இடம் பெற்று, மாபெரும் சாதனைப் புரிந்து, நமக்கெல்லாம் பெருமை சேர்த்துள்ளது. இதுபோன்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்போது, தமிழகத்தின் கிராமப் பகுதியில் விளையாட்டில் ஆர்வமுள்ள இளைஞர்கள் தேர்வு செய்து, அரசு செலவில் அவர்களை பார்வையாளர்களாகப் பங்கேற்க வகை செய்ய வேண்டும்.

மேலும், தமிழ்நாடு மாநிலத்தில் இளைஞர்கள் தங்களுடைய தனித் திறனை வெளிப்படுத்தி பயன்பெறும் வகையில், ஆண்டுதோறும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு மாநிலத்தில் hockey விளையாட்டுப் போட்டி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, இளைஞர்கள் அதிகளவு hockey போட்டிகளில் பங்கெடுத்திட, அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில், ஏழாவது ஹீரோ தமிழ்நாடு ஆசிய ஆண்கள் championship கோப்பை, Pass the Ball Trophy Tour போட்டியை சென்னையில் நடத்திடவும், அதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் எடுத்து செயலாக்கத்திற்கு வித்திட்டதும் நம் சின்னவர். விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்க வேண்டுமென்ற கனவைக் கொண்டு அலைகின்ற கிராமத்து இளைஞர்களுக்கு நம் இனமான தலைவர் கலைஞரின் பெயரால் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்மூலம் கிராமப்புற மாணவர்களின் விளையாட்டு ஆர்வம் ஊக்குவிக்கப்படுகிறது. அதனை சட்டமன்ற தொகுதியில் முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்கங்கள் தலா 3 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுவதன்மூலம் தமிழகத்தின் அனைத்து தொகுதிகளிலும் விளையாட்டு வீரர்கள் உருவாக்குவதற்கு வழிவகை செய்தது.

மணிப்பூர் கலவரத்தில் பாதிக்கப்பட்ட மணிப்பூர் விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாட்டில் பயிற்சி அளித்து, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றார் வரிகளுக்கு உயிர் வடிவம் தந்த முதல்வர் அவர்கள்,

உலகிலே புகழ் பெற்ற சர்வதேச அலைச் சறுக்கு போட்டியினை 2023 ஆம் ஆண்டில், ரூபாய் 2 கோடியே 68 இலட்சம் செலவிலே சிறப்புடன் நடத்தி, தமிழ்நாடு சர்வதேசப் போட்டிகளில் தலைநகரமாக மாறுகிறது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையை புதுப் பொலிவுடன் உருவாக்கிட, அமைச்சர் அவர்கள் 1562024 அன்று அந்த ஆணையத்திற்கு புதிய இலட்சினையை தந்துள்ளார். அந்த இலச்சினை, இலட்சியத்தின் சின்னமாகவே விளங்குகிறது. அதில் உருவாக்கப்பட்டுள்ள மஞ்சள் நிறம் ஆற்றல் மற்றும் விளையாட்டு ஆர்வத்தையும், நீலம் நிறம் சுதந்திரம் மற்றும் உத்வேகத்தை குறிக்கும் வகையிலும் இடம் பெற்றுள்ளது. வட்ட வடிவத்திற்குள் குறிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடம் தமிழ்நாடு, விளையாட்டு துறையில் மிளிர்கிறது என்பதனை குறிக்கும் வகையில் மிக பொருத்தமாக அறிவித்துள்ளார். அதற்கு கீழே Sports Development Authority of Tamil Nadu என்பதன் சுருக்கமாக SDAT என்று குறிப்பிட்டு ள்ளார். ஆனால், என் பார்வையிலே அது, சுயமரியாதை, முன்னேற்றம், இலக்கை அடைதல், உருமாறுதல் என அந்தத் துறையை சுயமரியாதையுடன்கூடிய முன்னேற்றத்தின்மூலம் இலக்கை அடைந்து, தமிழ் நாட்டை பிரம்மாண்டமான விளையாட்டு தலைநகரமாக உருவாக்கும் இலக்கோடு இலச்சினையை வெளியிட்டுள்ளார் சின்னவர் அவர்கள். சென்னை மாநகரிலுள்ள. . .(மணியடிக்கப்பெற்றது)

பழமையான விளையாட்டு உட்கட்டமைப்புகளை சர்வதேச தரத்தில் உயர்த்தி, மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கத்திற்கு ரூபாய் 11 கோடியே 34 இலட்சம் மதிப்பீட்டிலும், ஜவஹர்கலால் நேரு விளையாட்டு அரங்கத்திற்கு ரூபாய் 5 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலும், ஜவஹர்கலால் நேரு உள் விளையாட்டு அரங்கத்திற்கு ரூபாய் 2 கோடியே 33 இலட்சம் மதிப்பீட்டிலும் நிதி வழங்கி, அரசாணை பிறப்பிப்பதற்கு சென்னை மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை அவன்கண் விடல்."

என்ற வள்ளுவன் குறள் மொழிக்கேற்ப, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையினை நமது சின்னவர் அவர்களுக்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அளித்தவுடன், புலி புகுந்த குகை போல, எப்பொழுதும் இல்லாத அளவிற்கு விளையாட்டுத் துறை பாய்ச்சலில் நிற்கிறது. எந்த மாநிலத்தோடு ஒப்பிட்டாலும், தமிழ்நாடு அந்த மாநிலத்திற்கு சலித்தது இல்லை என்று சொல்லுகின்ற அளவிற்கு Khelo India விளையாட்டு போட்டிகளையும் நடத்தி, விளையாட்டு போட்டியின் தலைநகராக தமிழ்நாட்டினை மாற்றி காட்டுகின்ற இந்த திராவிட மாடல் அரசுக்கு எதிராக, ஒரு கல், ஒரு கண்ணாடியை எறியவரும் எதிரிகளுக்கு கழகத் தலைவனாக பதிலடித் தந்து; சரவணன் இருக்க பயமேன் என்ற கெத்து காட்டி; தமிழக மக்களின் கண்ணே கலைமானாக; அவர் தம் மனதில் மனிதனாக நின்று; மாமன்னனாக வென்றிருக்கும் சின்னவர்; கலைஞர் அவர்களின் நெஞ்சுக்கு நீதியின் ஏழாம் அத்தியாயத்தை எழுதுவார் என வாழ்த்துகிறேன். விதைத்தறி தொழிலாளர்களுக்கு. . . (மணியடிக்கப்பெற்றது)

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத நிலையில், தாய் திருநாடாம் நம் தமிழ்நாட்டில் மட்டும் தான் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை என்ற பெருமை மிகுந்த துறையை உருவாக்கிய பெருமை நம் முதல்வர்; நம் தலைவர்; தளபதி அவர்களையே சாரும். இன்னும் தங்க கவசமாக இந்தத் துறையின் அமைச்சராக, நம் இளைய தலைவர்; வருங்கால தமிழகம்; சின்னவர் அவர்களை துறையின் அமைச்சராக நியமித்து இருப்பது என்றும் பெருமைபட வைக்கிறது.

தமிழ்ப் புதல்வன் திட்டம், பெண்கள் கல்வி கற்பதற்கு மட்டும்தான் உதவியா? ஏன் ஆண்களுக்கு கிடையாதா என்று மாணவச் செல்வங்களின் உயர்கல்விக்கும் மாதந்தோறும் ரூ.1,000 விரைவில் வழங்கவுள்ளார். புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டங்கள் மூலமாக உயர்கல்வி பயிலுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. "100 இளைஞர்களை தாருங்கள், நான் இந்தியாவையே மாற்றி காட்டுகிறேன்" என்ற துறவி விவேகானந்தர் அவர்கள் வாக்கினைப்போல, நூறு பேர் அல்ல, ஒற்றை இளைஞராய் தலைவர் கை நீட்டிய திசையில் எட்டிப் பாய்ந்த ஈட்டி முனையாய், களமாடி ஆணையை நிறைவேற்றி, ஒன்றிய அரசின் திசையை மாற்றிய சின்னவர் அவர்களை வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இறுதியாக, என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி, தாங்கள் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற மூன்றாண்டுகளில் நீதியோடும், நியாயத்தோடும் ஆட்சிபுரிந்து வந்ததன் ஆதாரமாக, வேதாகமத்தில் சங்கீதம் 89:14ல் உள்ள வாக்கியத்தை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

"நீதியும், நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் ஆதாரம்; கிருபையும் நித்தியமும் உமக்கு முன்பாக நடக்கும்" என்று கூறி, வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

அம்பத்தூர் ஓ.டி. வரை மெட்ரோ இரயில் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். அம்பத்தூர் பகுதி முழுவதிலும் உள்ள உயரழுத்த மேல்நிலை மின்கம்பிகளை புதைவிடமாக மாற்றியமைத்துத் தர வேண்டும்.

அம்பத்தூர், வார்டு 8ல் உள்ள மாதனாங்குப்பம் மற்றும் வார்டுகள் 79 முதல் 86 வரையுள்ள விடுபட்ட தெருக்களில் பாதாளச் சாக்கடைப் பணிகளை விரைவில் செயல்படுத்த வேண்டும்.

சென்னை பாடிஅம்பத்தூர் ஓ.டி. வரை CTH சாலை மற்றும் இரயில்வே மேம்பாலத்தை விரிவுபடுத்த வேண்டும். அம்பத்தூர் பகுதியிலுள்ள டன்லப் தொழிற்சாலைக்கு அரசினால் வழங்கப்பட்ட 6 ஏக்கர் நிலம் கொண்ட விளையாட்டு மைதானத்தை அரசே திரும்பப் பெற்றுக்கொண்டு, அம்பத்தூர் தொகுதிக்கு சிறப்பான விளையாட்டு மைதானம் அமைத்துத் தர வேண்டும். கொரட்டூர் ஏரியைத் தூர்வாரி கரையைப் பலப்படுத்தித் தர வேண்டும்.

இவ்வாறு ஜோசப் சாமுவேல் பேசினார்.

விழுப்புரம் மாவட்டம் – விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலையொட்டி சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு வழிகாட்டுதல்படி, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன் ஆலோசனைபடி, வீரமூர் கிராமம் மேட்டு தெருவில் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து உதயசூரியன் சின்னத்துக்கு அண்ணா நகர் தெற்கு பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி., பகுதி துணைச் செயலாளர் எஸ்.பி.குமார், 107 (அ) வட்டச் செயலாளர் வி.எம்.சிவா, மற்றும் உள்ளூர் பி.எல்.சி பாக ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்டோர் வாக்குகள் சேகரித்தனர்.

விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் மேலகொந்தை ஊராட்சி பகுதியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ. உதயசூரியன் சின்னத்திற்காக வீடு வீடாக சென்று பொது மக்களிடம் தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். உடன் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் பகுதி, கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக கிளை கழக செயலாளர், கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

கடந்த 3 ஆண்டுகளில் 16.74 லட்சம் மாணவ- மாணவியர்க்கு

தரமான மிதிவண்டிகளே வழங்கப்பட்டுள்ளன!

பொய்ச் செய்திக்கு அரசு மறுப்பு!

சென்னை, ஜூலை 1- மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மிதிவண்டிகளின் தரம் குறித்து வெளிவந்த உண்மைக்குப் புறம்பான பத்திரிகைசெய்திக்கான அரசின் மறுப்பறிக்கை வருமாறு:-

தரம் குறைந்துள்ளதால், இலவசமாக வழங்கப்பட்ட மிதிவண்டிகளை விற்பனை செய்கிறார்கள் என்று தவறான செய்தி வெளிவந்துள்ளது.

மாணவ, மாணவியர்களின் நலன் கருதி ஆண்டுதோறும் இலவச மிதி வண்டிகள் அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் ஆண்டுதோறும் தோராயமாக 5 இலட்சம் மிதி வண்டிகள் வழங்கப்படுகின்றது.

இந்த அரசு பொறுப்பேற்று, கடந்த 3 ஆண்டுகளாக 16,73,374 தரமான மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

மிதிவண்டிகள் ஒப்பந்தப்புள்ளி சட்ட விதிமுறைகளின்படி கொள்முதல் செய்யப்படுகின்றன. மிதிவண்டிகள் தரம் இரண்டு நிலைகளில் உறுதி செய்யப்படுகின்றது.

மிதிவண்டிகளை கிண்டியில் உள்ள CTAL(Chemical Testing Analytical Lab) நிறுவனத்தில் முழுமையாக Destructive Test செய்யப்பட்டு தர அறிக்கை (Quality Test Report) பெறப்படுகிறது. அதன் பின்னரே நிறுவனங்களுக்கு கொள்முதல் ஆணை வழங்கப்படுகிறது.

மாணவர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படுவதற்கு முன்பாக, மிதிவண்டிகள் Specificationபடி தரமாக உள்ளது என்று உறுதி செய்யப்படுகிறது.

இச்செய்தி குறித்து கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தலைமையில் குழு அமைத்து கள ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளனர்.

அவ்வறிக்கையின்படி செல்வபுரம், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட மிதிவண்டிகள் பயனுள்ளதாக இருப்பதாகவும், நல்ல நிலையில் அதனை பயன்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர். மிதிவண்டி தரம் சார்ந்து எவ்வித புகாரும் பெறப்படவில்லை எனவும் மிதிவண்டிகளை தனியார்களுக்கு விற்பனை செய்ததாக மாணவர்களால் தெரிவிக்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாளிதழில் வெளிவந்த செய்தியில் குறிப்பிட்டுள்ள கடை ஆய்வு செய்யப்பட்டதில், அங்கிருந்த சில மிதிவண்டிகள் சிறு பழுதுகளை சரி செய்வதற்காக மாணவர்களால் கடையில் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், பழுதுநீக்கம் செய்யப்பட்டவுடன் மாணவர்கள் பெற்றுச் செல்வர் என்றும், அவை விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டவை அல்ல என்று தெரியவருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. மாணவ மாணவியருக்கு தரமான மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றது.

எனவே பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்தியாகும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மதுரை கே. தாவூது
ஜூலை 1 (2004)

மதுரை மாநகர் நெல்பேட்டை பகுதியில் வட்டக் கழக பிரதிநிதி, வட்டக் கழகச் செயலாளர், மாநகர் கழக துணைச் செயலாளர், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

இவர் நிர்வாகப் பொறுப்பில் இருந்தபொழுது மதுரை மாநகர் மாவட்டக் கழகத்திற்கு சொந்தமாக இடம் வாங்கி மேயர் முத்து மன்றம் என்ற பெயரில் கட்டிடம் கட்டி, தலைவர் கலைஞர் அவர்களை அழைத்துவந்து திறந்து வைத்தார்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.